**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.164** **நாள் : 25.05.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு 2027க்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பயிற்சி வகுப்பு தமிழ்நாடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் திரு.சுந்தரேஷ் பாபு, இ.ஆ.ப., தலைமையில் இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் திரு.சுந்தரேஷ் பாபு, இ.ஆ.ப., தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர்/முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு 2027க்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பயிற்சி வகுப்பு இன்று (25.05.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகைக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம் வழங்கிய வழிகாட்டுதலின்படி, நாடு முழுவதும் முழுமையான மற்றும் ஒழுங்குமுறை தரவுச் சேகரிப்பை உறுதிசெய்யும் வகையில், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது.

**கட்டம் – I : வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு (HLO)**

| செயல்பாடு | காலம் | நாட்கள் |
|---|---|---|
| சுய கணக்கெடுப்பு (Self Enumeration - SE) | 17.07.2026 முதல் 31.07.2026 வரை | 15 நாட்கள் |
| வீட்டு பட்டியலிடும் பணிகள் (House Listing Operations - HLO) | 01.08.2026 முதல் 30.08.2026 வரை | 30 நாட்கள் |

**கட்டம் – II : மக்கள் தொகை கணக்கெடுப்பு (Population Enumeration - PE) பிப்ரவரி 2027 மாதத்தில் நடைபெறும்.**

வீடுதோறும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதற்கு முன், விருப்பத் தேர்வாக 15 நாட்கள் சுய கணக்கெடுப்பு காலம் வழங்கப்படும்.

சுய கணக்கெடுப்பு இணையதளம் பாதுகாப்பான இணையவழி வசதியாகும். இதன் மூலம் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்கள், களப்பணிகள் தொடங்குவதற்கு முன்பாக தங்களது குடும்ப விவரங்களை இணையத்தின் மூலம் பதிவேற்றம் செய்யலாம். விவரங்கள் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டதும், தனித்துவமான சுய கணக்கெடுப்பு அடையாள எண் (SE ID) உருவாக்கப்படும். இந்த SE ID-ஐ கணக்கெடுப்பாளரிடம் வழங்க வேண்டும். அதனடிப்படையில் கணக்கெடுப்பாளர் தகவல்களை உறுதிப்படுத்துவார்.

கட்டம் – Iஆன வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பிற்கான விரிவான 33 கேள்விகள் அடங்கிய வினாத்தாளை அரசு ஏற்கனவே ஜனவரி 2026-இல் அறிவித்துள்ளது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பை திறம்பட மேற்கொள்ள சுமார் 11,000 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தரவுத் தரம், துல்லியம் மற்றும் செயல்திறனை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சித் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

25.05.2026 முதல் 27.05.2026 வரை மூன்று நாட்கள் இப்பயிற்சி வகுப்புகள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று (25.05.2026) தமிழ்நாடு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரகத்தால் நியமிக்கப்பட்ட முதன்மை பயிற்சியாளர்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர்கள், மாநகர வருவாய் அலுவலர்கள், கூடுதல் மாநகர வருவாய் அலுவலர்கள், முதுநிலை வருவாய் அலுவலர்கள், உதவி ஆணையாளர்கள், மூத்த வருவாய் அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி வழங்கும் களப்பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட பயிற்சி வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில், மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி)/நகர மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் திரு. ம. பிரதிவிராஜ், இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**